Annual Appeal News Letter – 2018

# *Tamils Rehabilitation Organisation (Australia)*

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஒஸ்ரேலியா

**Season's Greetings – 2018**

We strive to provide assistance for relief, rehabilitation and basic education to the war affected people in North-East of Sri Lanka.

Tamils Rehabilitation Organisation (Australia) has adopted Itself to the various needs and challenges in the delivery of humanitarian assistance to the war affected people In the North East of Srilanka by identifying the areas of need and providing both emotional and material support to the Widowed women, destitute children and other war affected persons who are all facing un-told Hardship daily.

For the past 25 years, volunteers of TRO Australia have conducted Christmas Radio Thon appeals on 25 December with an objective to raise awareness of the plight of the war affected / re-settled people in North East of Sri Lanka and to appeal for donations towards the various humanitarian programs undertaken by Tamils Rehabilitation Organisation - Australia.

TRO Australia has recognised the need for humanitarian assistance to the war affected resettled persons and have extended assistance over many years with the continued support of very generous donor community in Australia.

The humanitarian assistance extended by TRO Australia, are delivered via various Community Based Organisations [CBOs] which operate with a high sense of dedication in the North East of Srilanka..

During the year to-date in 2018 (Jan – 1st week of Dec), TRO Australia has expended a total of Aust **$75,584** giving assistance in the following areas:

- Early Childhood Development - Nutritional Program $23,286.
- Empowerment programs for resettled women - Construction of Wells $11,596.
- Farming implements /materials to farmer producer community in Kilinochchi District $9579.
- Educational Assistance via supply of E-learning implements to remote schools in North & East $23,763.
- Computer - IT / teachers training workshops assistance $2,155.
- Elders Home and Children Educational Centre in Vavuniya district operational funding assistance $5,205.



TRO Australia has been able to create awareness of the plight of the war affected & re-settled people in North East of Sri Lanka among the NGO community through its longstanding association with them and will continue to engage them even more in its endeavors in the delivery of humanitarian assistance.

**TRO Australia & volunteers will not conduct the Radio-Thon appeal this year on Christmas day**, Due to practical difficulties, we have faced on recent times.



***We thank our donors for their continued support extended to TRO Australia's humanitarian programs over the many years.***

***The volunteers at TRO Australia send out their season's greetings for 2018 to the donor community at large.***

***Thank you.***

Australian Council For International Development

**Tamils Rehabilitation Organisation is registered in Australia as *Tamils Rehabilitation Organisation (Australia) Ltd.* ACN 063 019 189**

***T R O Australia** is a Full member of the **Australian Council for International Development.***

வருடாந்த வேண்டுதல் அறிக்கை – 2018

## ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வருடாந்த வேண்டுதல் அறிக்கை-2018

இலங்கை வட-கிழக்கில் இன்னமும் பல பிரதேசங்களிலுள்ள விதவைகளும், பெற்றோரை இழந்த சிறுவர்களும், மற்றும் மீள்-குடியேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படும் உடலும் உள்ளமும் பாதிப்புற்றிருக்கும் ஏராளமான மக்களும் சொல்-லொணாத் துயரத்தையும் கஷ்டங்களையும் தினமும் அனுபவித்து வருகிறார்கள் என்பது யாவருமறிந்த விடயமே. ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அங்கு தாய்நாட்டிலிருக்கும் தற்போதைய நிலைமைக்கேற்ற தேவைகளுக்கும் சவாலுக்கும் தகுந்தவாறு தனது திட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டதுடன், பாதிப்புற்றோருக்கான தேவைகளை இனங்கண்டு, அவர்களுக்கு பொருள் ரீதியானதும் உளநல ரீதியானதுமான உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றது.

கடந்த 25 ஆண்டுகளாக (ஒஸ்ரேலியா) த.பு.கழகத் தன்னார்வத் தொண்டர்களினால் ஒவ்வொரு டிசெம்பர் 25ந் திகதி புனித நத்தார் தினமன்றும் வருடாந்த நத்தார் வேண்டுதலை நடாத்தி வந்தோம். நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இவ்வாண்டு ரேடியோதோன் மூலம் வருடாந்த வேண்டுதலை நாம் செய்யவில்லை. ஆனால் எமது நோக்கங்களின் முக்கியமானதொன்றாக, யுத்தத்தால் பாதிப்படைந்தோர், இலங்கை வட-கிழக்கில் மீள்குடியேறியிருப்போர் பற்றிய விழிப்புணர்ச்சியை இந்நாட்டில் அதிகரிப்பதுடன், தொடர்ந்தும் தாயகத்தில் தேவைப்படும் அத்தியாவசியமான திட்டங்களுக்கும், மனிதாபிமானப் பணிகளுக்கும், உடனடி நிவாரணங்களுக்கும் நீங்கள் எமக்களித்த நிதி ஆதரவைக் கொண்டு தொடர்ந்தும் தேவையான உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்க வழிவகைகள் செய்தலுமாகும்.

அவ்வாறான உதவிகளை எமது கழகம் வட-கிழக்கிலுள்ள மனிதாபிமானமும் உயர்வான அர்ப்பணிப்பு உணர்வுடன் இயங்கிவரும் சில சமூக நலன்சார் நிறுவனங்கள் மூலம் ஆற்றிவருகின்றது. எமது ஒஸ்ரேலிய த.பு.கழகத்தினால் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அடிப்படைக்கல்வி ஆகியன அவசியப்படும் சிறுவர்களைக் கொண்ட பராமரிப்பு நிறுவனங்களுக்கும், மற்றைய பாதிப்புற்ற பெண்கள், முதியவர்களைப் பாராமரிக்கும் அமைப்புக்களுக்கும் தேவையான நிதி உதவியை வழங்க எமது கழகம் ஏற்பாடுகளை செய்து வைத்துள்ளது.

இத்துடன் ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ***கீழ்வரும் மனிதாபிமான சேவைகளுக்கும்*** உதவிகளை வழங்கி வருகின்றது.

- ***ஆரம்பச் சிறுவர்பராய அபிவிருத்தித் திட்டங்கள் போஷாக்கு உணவு விநியோகம் $ 23,286***
- ***மீள்குடியேறியுள்ள பெண்களுக்கு வலுச்சேர்க்கும் முன்னேற்றத திட்டங்கள்- கிணறுகள் அமைத்தல் $11,596***
- ***க.பொ.த. சா/த. மற்றும் உயர்/தர. பிற்பட்ட தமிழ் பகுதி மாணவர்களுக்கு தேவையான கல்விசார் மேம்படுத்தல் E-கல்வி திட்டங்களுக்கான உதவி - $23,763***
- ***கணணி மற்றும் வர்த்தகப் பயிற்சிப் பட்டறைகள் உதவி (ஆசிரியர்களுக்கும்) - $2,155***
- ***கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய மற்றும் விவசாய உற்பத்தியாளர் சமூகத்திற்கு தேவையான கருவிகள் மற்றும் பொருட்கள் உதவித் திட்டங்கள் - $9,579***
- ***வவுனியா மாவட்டத்தில் முதியோர் மற்றும் குழந்தைகள் கல்வி மையங்களின் செயற்பாட்டுக்கான நிதி உதவித் தொகையும் அத்துடன் வாழ்வாதார உள்ளீடுகளும் - $5,205***

**மேற்படி திட்டங்களுக்கு 2018இல் இதுவரை** (டிசம்பர் முற்பகுதி வரை) **மொத்தமாக *$75,584* செலவழிக்-கப்பட்டுள்ளது.**



உதவிக்கரம் நீட்டும் பல அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நீண்டகாலமாக எமக்குள்ள தொடர்புகள் காரணமாக அவர்களுக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் இலங்கை வடக்கு கிழக்கில் குடியேற்றப்பட்டிருப்போரின் அவல அனுபவங்கள் பற்றியும் எமது கழகம் எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த வகையில், அவர்கள் மூலமாக தொடர்ந்தும் பாதிப்புற்றோருக்கான மனிதாபிமான சேவையை அளிப்பதற்கு எமது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) முயற்சிக்கும் என்பது உறுதி.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) ஆற்றிவரும் மனிதாபிமான சேவைகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டி வரும் அன்புள்ளங்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் பண்டிகைக்கால நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.**

இந்த நன்னாட்களில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒஸ்ரேலியா டிசெம்பர் 25ல் ரேடியோத்தொன் நிகழ்ச்சியை, விக்ரோரிய ஈழத்தமிழ்ச் சங்கம் நடாத்தும் 3CR தமிழ்க்குரல் வானொலி ஊடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ் வானொலி ஊடாகவும் சக தமிழ் சமூக வானொலிகளுடன் இணைந்து கடந்த **25 வருடங்களாக** நடாத்தி வந்த ரேடியோதோன் நிதிசேகரிப்பு நிகழ்ச்சியை, எமக்கு தாயகத்தில் போர்முடிவின் பின்னரும் தொடரும் அழுத்தங்கள், நெருக்குதல்கள், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக **இவ்வாண்டுக்கான் வருடாந்த வேண்டுதலை நாம் நடாத்த முடியவில்லை**. ஆனால் மனிதாபிமான சேவைகளும், உடனடி நிவாரணங்களுக்கும், நோக்கங்கள் நிறைவேறவும் நீங்கள் எமக்களித்த நிதி ஆதரவைக் கொண்டு தொடர்ந்தும் செயற்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுகின்றோம். இதேபோன்று தாயகத்தில் அல்லலுறும் எம் இரத்த உறவுகளுக்கான மனிதாபிமானப் பணிகளும், உதவித் திட்டங்களும் எம் சக தமிழ் தன்னார்வ தொண்டு அமைப்புக்களூடாக, அது தொடர்ந்து இடம்பெற உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**நன்றி!!**